## மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி

**அசல் வழக்கு எண். 74/2019 வா.சா.1**

2026–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 03–ம் நாள் செவ்வாய்கிழமை–ன் வாக்குமூலம்
1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: பழனியப்பன் | தந்தை பெயர்: இராமசாமி |
| ஊர்: | தாலுகா: |
| வயது: | தொழில்: |
| ஜாதி: | சமயம்: |

---

**03.02.2026:**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் கீழவண்ணாயிருப்பு பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கோயம்முத்தூரில் சுமார் 40 வருடமாக வசித்து வருகிறேன். எனது இடத்தில் பிரம்மி என்பவர் வீடு கட்டியதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதன் சர்வே எண் 76/11 ஏ 7 அதன் விஸ்தீரணம் 60 செண்டாகும். எனது அப்பா பெயர் இராமசாமி. எனது உடன்பிறந்தவர்கள் 6 பேர் ஆகும்.

2. வழக்கு சொத்தின் நான்குமால் தெற்கே –கருப்பச்சாமி சேர்வை இடம், வடக்கு–காடம் சேர்வை இடம், மேற்கே– கோவில் இடம், கிழக்கே–கால்வாய் உள்ளது. தாவாச் சொத்து எனது பூர்வீகச் சொத்தாகும். நான் 20 வருடமாக அனுபவித்து வருகிறேன். நான் இந்த வழக்கை 2015 ம் ஆண்டு தாக்கல் செய்தேன். எனது உடன்பிறந்தவர்கள் மென்னன், பொன்னுச்சாமி ஆவார்கள்.

3. பிரதிவாதி மென்னன், பொன்னுச்சாமியிடமிருந்து 23.09.2002 ம் தேதி கிரையம் வாங்கிய விவரம் தெரியுமா என்றால் 2013 ம் வருடம் தான் தெரியும். பிரதிவாதி தாவாச் சொத்தில் வீடு கட்டிய விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது அம்மாச் சொல்லி தெரியும். மேற்படி வீட்டிற்கு பிரதிவாதி நான் இல்லாத நேரத்தில், மின் இணைப்பு வரி இரசீது பெற்றுள்ளார். பிரதிவாதி இறந்த பிறகு பிரதிவாதியின் வாரிசுகளான மற்ற பிரதிவாதிகள் தாவாச் சொத்தில் குடியிருக்கிறார் என்றால் இல்லை ஆடு மாடுகள் வைத்து கட்டியிருக்கிறார்.

4. தாவாச் சொத்தில் தார்சு வீடு பிரதிவாதி கட்டியுள்ளார். வீடு உள்ளது ஆனால் வீட்டில் குடியிருக்கவில்லை. நான் 10 செண்டிற்காக வழக்கு போட்டுள்ளேன். அந்த 10 செண்டு நான்குமால் பிராதில் சொல்லவில்லை. 15 வருடத்திற்கு முன்பாக எனது சகோதர, சகோதரிகளுக்கிடையே செய்யப்பட்ட பாகத்திற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எனது சகோதரர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தினை அவர்களிடமிருந்து பிரதிவாதி கிரையம் பெற்று வீடு கட்டியுள்ளார் என்றாலும், எனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் நான்குமால் தெரியாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ–2 பட்டா தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பட்டா நிலமற்ற ஏழைக்களுக்கு கொடுக்கப்பட்ட என்றால் சரிதான். எனது பிராதில் தாவாச் சொத்து பூர்வீகச் சொத்து என்றும், மற்ற சொத்துக்கள் உண்டு என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ–1 பட்டா 2017 ம் வருடம் பெற்றுள்ளேன் என்றால் இல்லை.

6. 14.07.2017 ம் தேதியிட்ட 10(1) பட்டா தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ–3 ல் 27.08.2025 ம் தேதி பெற்றுள்ளேன் என்றால் சரிதான் . அதன் வகைப்பாடு தரிசு என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் . மேற்படி தாவாச் சொத்து தரிசு என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ–4 ல் கிராம நிர்வாக அலுவலர் கடிதம் 27.08.2025 ல் கொடுத்துள்ளார் என்றால் சரிதான் . நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பின்னால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றாலும், என்னிடம் ஆவணங்கள் இருந்திருந்தால் வழக்கு தாக்கல் செய்தே போதே ஆவணங்களையும் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

7. தாவாச் சொத்து முழுவதுமான 60 செண்டிற்கு நான்குமால் சொல்லியுள்னே் என்றால் வழக்கு சொத்தான 10 செண்டிற்கு நான்குமால் தெரியாததால் நான் பிராதுவில் போடவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி 2022 ம் முதல் தனது அனுபவத்தில் வைத்து அதில் வீடு கட்டி வாழ்ந்து வருகிறார் என்றாலும், அதற்குண்டான மின்இணைப்பு, வீட்டுவரி இரசீது பிரதிவாதி பெயரில் உள்ளது என்றாலும், வழக்கு சொத்தின் விவரம் எனக்கு தெரியாததால் பிரதிவாதியை ஏமாற்றி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து என் அனுபவத்தில் இல்லாமல் நான் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், மேற்படி வழக்கு பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.